# 13

# மஸ்ஜித்

முஸ்லிம்களின் வாழ்வோடு என்றும் பின்னிப்பிணைந்த இடம் மஸ்ஜிதாகும். அது அருள் நிறைந்த இடம்; அமைதியும் பக்தியும் பிரவாகிக்கும் இடம்; மலக்குகள் ஆஜராகும் இடம். எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் மஸ்ஜிதுடன் பலமானதும் உணர்வு பூர்வமானதுமான உறவை வைத்துக்கொள்ளல் வேண்டும். அது ஈமானின் வெளிப்பாட்டிற்கான ஓர் அடையாளமாகும். மறுமையில் ஈடேற்றம் பெறுவதற்கான ஒரு வழியுமாகும்.

''எவருடைய உள்ளம் மஸ்ஜிதோடு நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றதோ அவர் மறுமையில் அர்ஷின் நிழலின் கீழ் இருப்பார்'' (புஹாரி)

அல்லாஹ்வை வழிபடுவதற்குப் பயன்படுத்துகின்ற இறை இல்லங்களையே மஸ்ஜித் என்ற பதம் குறிக்கிறது. ஸுஜூத் செய்யுமிடம் என்பது இதன் நேரடி மொழிக் கருத்தாகும்.

**''நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம் அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன.'' (72: 18)**

அல்லாஹ் மஸ்ஜிதுகளின் அந்தஸ்தை உயர்த்தியும் மகிமைப்படுத்தியும் அவற்றை தனக்கே உரியன எனக் குறிப்பிட்டிருப்பதும் இவ்வுலகில் தனக்கு மிகவும் விருப் பத்துக்குரிய இடம் மஸ்ஜிதே எனச் சிலாகித்துக் கூறியிருப்பதும் அதன் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறான சிறப்புக்கள் நிறைந்த இறை இல்லங்களின் புனிதத்து வத்தைப் பேணுவதும் அதற்கே உரித்தான கண்ணியத்தை வழங்குவதும் அதைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

அவ்வாறே மஸ்ஜித்களில் பேணி நடக்க வேண்டிய ஒழுக்கங்களை இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. அவை ''ஆதாபுல் மஸ்ஜித்'' என அழைக்கப் படுகின்றன.



## 1. வணக்கங்களை நிறைவேற்றுமிடம்

மஸ்ஜிதுகள் நாம் இறைவனுக்காக வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளும் புனிதமான இடங்களாகும். தொழுவது, அல்லாஹ்வை நினைவுகூர்வது, அல்குர்ஆனை ஓதுவது போன்றன அங்கு இடம்பெற வேண்டிய மிக முக்கிய இபாதத்களாகும்.

''அவ்வீடுகளில் அல்லாஹ்வின் திருப்பெயர்கள் கூறவும், அதை கண்ணியப் படுத்தவும் அவன் கட்டளையிட்டிருகின்றான்.'' (24: 36)

''நிச்சயமாக அவை மஸ்ஜிதுகள் அல்லாஹ்வை திக்ரு செய்வதற்கும் தொழு வதற்கும் அல்குர்ஆனை ஓதுவதற்குமான இடங்களாகும்'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



## 2. தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுதல்

இஸ்லாத்தில் எந்தவொரு இடத்திற்கும் இல்லாத முக்கியத்துவமும் புனிதத்துவமும் மஸ்ஜிதுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆகவே தான் மஸ்ஜிதுக்குள் நுழைந்ததும் ஒருவர் காணிக்கையாக இரண்டு ரக்அத்துக்கள் தொழுது செல்லுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள்.

''உங்களில் ஒருவர் மஸ்ஜிதினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத்துக்கள் தொழாமல் மஸ்ஜிதில் அமர வேண்டாம்.'' (புஹாரி)

வெள்ளிக்கிழமை தினமொன்றில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்த வேளை மஸ்ஜிதினுள் நுழைந்து உட்கார்ந்த ஸுலைக்கா அல்அத்பானி என்ற ஸஹாபியை நோக்கி இரண்டு ரக்அத்துக்கள் தொழுதுவிட்டு அமருங்கள் எனக் கட்டளை பிறப்பித்தார்கள். எனவே மஸ்ஜிதுக்குள் நுழையும் ஒருவர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தான செயலாகும்.

இது தஹிய்யத்துல் மஸ்ஜித் (மஸ்ஜிதுக்கான காணிக்கைத் தொழுகை) எனப்படும். இதனை மஸ்ஜிதுக்கேயுரிய சிறப்பம்சம் எனவும் குறிப்பிடலாம்.

ஆனால் மஸ்ஜிதுல் ஹராமில் நுழைபவர் இத்தொழுகைக்குப் பதிலாகத் தவாப் செய்தலே அதற்குரிய தஹிய்யத்துல் மஸ்ஜித் ஆகும்.

### 3. தூய்மை பேணல்

மஸ்ஜிதினுள் நுழைபவரது உடலும் உடையும் தூய்மையாக இருக்க வேண்டும். நஜீஸுடனோ, துர்வாடைகளுடனோ நுழைவதை இஸ்லாம் தடுத்துள்ளது.

**''ஆதமுடைய மக்களே மஸ்ஜிதுகளில் (ஆடைகளினால்) உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்.''** (7: 31) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

எப்போதும் வெண்மையான ஆடைகள் அணிவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வரவேற்றுள்ளார்கள்.

''நீங்கள் வெள்ளை நிறமான ஆடைகளை அணியுங்கள். ஏனெனில் அதுவே உங்கள் ஆடைகளில் மிகவும் சிறப்பானதாகும். மேலும் உங்களில் மரணித்தவர்களை அதனால் கபன் செய்யுங்கள்.'' (அபூதாவூத்)

### 4. மஸ்ஜிதுக்குள் நுழையும்போதும் வெளியேறும் போதும் பிரார்த்தித்தல்:

உங்களில் எவரேனும் மஸ்ஜிதுக்கு வந்தால் அவர் முதலில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும். பிறகு வலது காலை வைத்து

اَللَّهُمَّ افْتَحْ لِيْ أَبْوابَ رَحْمَتِكَ

**''இறைவா எனக்கு நீ உன் கருணையின் வாசலைத் திறந்து வைப்பாயாக''** என்று பிரார்த்திக்க வேண்டும். (முஸ்லிம்)

மஸ்ஜிதினுள் இருந்து வெளிச்சென்றால் முதலில் இடது காலை வைத்து

اَللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

**''இறைவா நான் உனது அருளை உன்னிடம் வேண்டுகிறேன்''** என்று பிராத்தித்துக் கொள்ள வேண்டும். (முஸ்லிம்)

### 6. மஸ்ஜிதில் அமைதி பேணல்

மஸ்ஜிதுகள் இறையில்லங்கள். எனவே அங்கு அமைதியாகவும் பணிவாகவும் நடந்து கொள்வதும் அதன் கண்ணியத்தைப் பேணி நடப்பதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

ஒரு முறை மஸ்ஜிதுன் நபவியில் இரண்டு மனிதர்கள் சப்தமிட்டுக் கதைத்துக் கொண்டிருந்ததை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டார்கள். அவர்களைத் தன்னிடம் அழைத்துவருமாறு பணித்தார்கள்.

அவர்களை அழைத்து வந்ததும், ''நீங்கள் இருவரும் எங்கிருந்து வருகின்றீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் ''நாங்கள் தாஇப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்'' எனப் பதிலளித்தனர். ''நீங்கள் மதீனா வாசிகளாக இருந்திருந்தால் இறைத்தூதரின் மஸ்ஜிதாகிய இந்த ''மஸ்ஜிதுல் நபவியில்'' உயர் தொனியில் கதைத்த உங்கள் இருவரையும் தண்டித்திருப்பேன்'' என்றார்கள்.

**எனவே மஸ்ஜிதுகளில் சப்தத்தை உயர்த்திக் கதைப்பது, பிறருக்கு இடையூறாக சப்தமிட்டு குர்ஆன் ஓதுவது, தொழுபவருக்கு முன்னால் குறுக்காகச் செல்வது, உட்கார்ந்திருப்பவர்களை விலக்கிக்கொண்டு தோளுக்கு மேலால் கடந்து செல்வது, வியாபாரம் செய்வது, காணாமல் போன பொருட்கள் பற்றி அறிவிப்புச் செய்வது போன்றவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்துள்ளார்கள்.**

## 5. மஸ்ஜிதைத் தூய்மையாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்

''மஸ்ஜிதைக் கூட்டிப் பெருக்குவது, தூய்மையாக வைத்திருப்பது, மஸ்ஜிதில் உள்ள குப்பைக்கூளங்களை வெளியேற்றுவது, நறுமணம் கமழச் செய்வது போன்றன சுவனத்திற்கு இட்டுச் செல்லும் வழிகளாகும். (இப்னு மாஜா)

''மஸ்ஜிதைத் தூய்மைப்படுத்தி வைத்திருப்பது ஹூருல்ஈன்களுக்குரிய மஹர் ஆகும்.'' (தபரானி)

இஸ்லாத்தின் அடையாளச் சின்னமும், முஸ்லிம்களின் மத்திய தலமுமாகிய மஸ்ஜிதை அழகாகவும் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்கும் அதனை மணம் கமழச்செய்வதற்கும் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்வது உயர்ந்த நற்செயலாகும்.



## *7. மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவைப் பேணல்*

*ஒரு முஸ்லிம் எப்போதும் மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவைப் பேணுவதும் அதன் பணிகளில் உளப்பூர்வமாகவும் முழுமையாகவும் பங்கேற்பதும் அதற்காக உழைப்பதும் தொண்டாற்றுவதும் அவசியமானதாகும்.*

*''ஒரு முஸ்லிம் மஸ்ஜிதில் தொழுதுவிட்டு அடுத்த நேரத் தொழுகைக்காக அங்கு காத்திருந்தால் அவர் அங்கிருந்து திரும்பிச் செல்லும் வரை மலக்குகள் ''இறைவா இந்த மனிதனது பாவங்களை மன்னிப்பாயாக. அவர் மீது அருள் புரிவாயாக'' என பிரார்த்திப்பார்கள். (முஸ்லிம்)*

***எனவே மஸ்ஜிதுகளின் மகிமைகளை மனதிற் கொண்டு, அவற்றைத் தூய்மையாக வைத்திருப்போம்.***

***அவற்றுக்குரிய ஒழுங்குகளைப் பேணுவோம்.***

***அவற்றின் கண்ணியத்தை மேலோங்கச் செய்வதற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.***

### பயிற்சி

1. *மஸ்ஜிதின் சிறப்புகள் யாவை?*
2. *மஸ்ஜிதுடனான தொடர்பை வலுப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் ஐந்து குறிப்பிடுக.*
3. *மஸ்ஜிதில் பேண வேண்டிய ஒழுங்குகள் யாவை?*
4. *மஸ்ஜிதை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை?*

### செயற்பாடு

*ஆசிரியரின் வழிகாட்டலுடன் உமது பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பள்ளிவாசலை சிரமதானம் மூலம் சுத்தம் செய்யுங்கள்.*